Ours bank with
Bank of Baroda

# மதுரை மணி

Madurai Mani Tamil Evening Daily
தினசரி தமிழ் நாளிதழ் ®
ISO 9001:2015 / ISO 14001:2015: தரச்சான்றிதழ் பெற்ற நிறுவனம்

New College House
(A Heritage Hotel)
2342971 (3 Lines)
4372900 (4 Lines)
99526 02900
95669 84900
College House
2, Town Hall Road, Madurai-625 001.

மதுரை பதிப்பு *மணி 55 * ஓசை 212 உள்ளூர் - 31.07.2026 வெள்ளிக்கிழமை விலை ரூ.4/- பக்கங்கள்-4 Website : http://maduraimaninews.com
Madurai Edition *Vol 55 * Issue 212 வெளியூர் - 01.08.2026 சனிக்கிழமை Price Rs. 4/- Pages -4 Email: maduraimaninews@gmail.com

**ஆகஸ்ட் 2026; மாத ராசி பலன்!** | **யூபிஎஸ்சி: 828 பணியிடங்கள்!** | **செந்தில் பாலாஜிக்கு முன்ஜாமின்!** | **பாடகி ஜமுனா ராணி காலமானார்!**

## அமெரிக்காவில் வேலை செய்ய ரூ.96 லட்சம் கட்டணம்; மாணவர்களுக்கு இடி!

வாஷிங்டன், ஜூலை. 31–

அமெரிக்காவில் படிப்பை முடித்தவர்கள், தொடர்ந்து அங்கேயே பணியாற்றுவதற்கு ரூ.96 லட்சம் கட்டணமாக விதிக்க அதிபர் டிரம்ப் முடிவெடுத்துள்ளார். அதாவது, எப்1 விசா மூலம் அமெரிக்காவில் பயிலும் பெரும்பாலான சர்வதேச மாணவர்கள் பட்டம் பெற்ற பிறகு, ஓராண்டு வரை தங்களது துறை சார்ந்த வேலைகளில் தங்கிப் பணியாற்றலாம். அறிவியல், தொழில்நுட்பம், இன்ஜினியரிங் மற்றும் கணிதம் படிப்புகளைப் படித்த மாணவர்கள், அதிகபட்சமாக 3 ஆண்டுகள் வரை பணியாற்ற முடியும்.



தற்போது, அமெரிக்காவில் கல்வி பயின்று முடித்த மாணவர்களுக்கு பணி அனுபவம் பெற வசதியாக கொண்டு வரப்பட்ட இந்தத் திட்டத்திற்கு தான், அதிபர் டிரம்ப் கட்டணத்தை விதிக்க பரிசீலனை செய்து வருவதாக அமெரிக்க ஊடகங்கள் செய்திகளை வெளியிட்டுள்ளன. இந்த முன்மொழிவு குறித்து உள்நாட்டுப் பாதுகாப்பு அமைச்சகத்திற்குள் இன்னும் விவாதிக்கப்பட்டு வருகிறது. இறுதி முடிவு எதுவும் எடுக்கப்படவில்லை. மேலும், இக்கட்டணத்தை மாணவர்களே செலுத்த வேண்டுமா அல்லது அவர்களை வேலைக்கு அமர்த்தும் நிறுவனங்கள் செலுத்த வேண்டுமா என்பதையும் அதிகாரிகள் இன்னும் முடிவு செய்யவில்லை.

இருப்பினும், இது ஒப்புதல் அளிக்கப்பட்டால், அமெரிக்காவில் வேலை தேடும் சர்வதேச மாணவர்களுக்கு விதிக்கப்படும் மிகப்பெரிய நிதித் தடையாக இது மாறும். அமெரிக்காவில் தற்போது 3.3 லட்சத்திற்கும் அதிகமான இந்திய மாணவர்கள் பயின்று வருகின்றனர். வெளிநாட்டு மாணவர் குழுக்களில் இந்தியர்களே மிகப்பெரிய அளவில் இருப்பது குறிப்பிடத்தக்கது.

## இஸ்ரேல் - காஸா போர் முடிவு?

வாஷிங்டன், ஜூலை. 31–

ஹமாஸ் அமைப்பினர் தங்களின் ஆயுதங்களை ஒப்படைப்பதற்கான ஒப்பந்தத்தை காஸா ஊ அமைதி வாரியம் மேற்கொள்ளவிருப்பதாக டிரம்ப் அறிவித்துள்ளார்.

ஹமாஸ் அமைப்பு ஆயுதங்களை ஒப்படைப்ப தால், காஸாவில் புதிய பால ஸ்தீன அரசு உருவாவதற்கான முக்கியமான முன்னேற்றம் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.




தேசிய காஸா நிர்வாகக் குழுவிடம் ஹமாஸ் அமைப்பு ஆயுதங்களை ஒப்படைத்த பிறகு, காஸாவிலிருந்து இஸ்ரேலிய படைகள் வெளியேறும் என்றும், சர்வதேச படையும் புதிய பாலஸ்தீனத்தின் காவல்துறையும் காஸா மக்களின் பாதுகாப்புக்குப் பொறுப்பேற்கும் என்றும் டிரம்ப் கூறியுள்ளார்.

இருப்பினும், காஸாவில் போர் நிறுத்தம் குறித்து இஸ்ரேல் தரப்பிலிருந்து இதுவரையில் தகவல்கள் எதுவும் வெளியிடப்படவில்லை.

## ஆந்திரா, கர்நாடகா மாநிலங்களில் பிரதமர் மோடி சுற்றுப்பயணம்!

புதுடெல்லி, ஜூலை. 31–

பிரதமர் நரேந்திர மோடி நாளை (ஆகஸ்ட் 1) ஆந்திரப் பிரதேசம் மற்றும் கர்நாடக மாநிலங்களுக்கு ஒருநாள் சுற்றுப்பயணம் மேற்கொள்ள உள்ளார். இந்தப் பயணத்தின் போது, இரு மாநிலங்களிலும் பல்வேறு உள்கட்டமைப்பு, போக்குவரத்து மற்றும் சமூக வளர்ச்சித் திட்டங்களை தொடங்கி வைப்பதுடன், புதிய திட்டங்களுக்கு அடிக்கல் நாட்டவும் உள்ளார். இந்தப் பயணம் தென் மாநிலங்களின் வளர்ச்சிக்கு முக்கியத்துவம் அளிக்கும் வகையில் அமைந்துள்ளதாக பிரதமர் அலுவலகம் தெரிவித்துள்ளது.

ஆந்திரப் பிரதேசத்தில் நடைபெறும் நிகழ்ச்சியில், ரூ.17,900 கோடிக்கும் அதிக மதிப்பிலான வளர்ச்சித் திட்டங்களை பிரதமர் தொடங்கி வைக்கிறார். சாலை, ரயில்வே, துறைமுகம், தொழில், எரிசக்தி உள்ளிட்ட பல்வேறு துறைகளைச் சேர்ந்த திட்டங்கள் இதில் இடம்பெற்றுள்ளன. வட ஆந்திராவின்




பொருளாதார வளர்ச்சிக்கு முக்கியமானதாக கருதப்படும் போகாபுரம் சர்வதேச விமான நிலையம் உள்ளிட்ட முக்கிய உள்கட்டமைப்பு திட்டங்களும் இந்தப் பயணத்தின் முக்கிய அம்சமாக உள்ளன. இத்திட்டங்கள் வேலைவாய்ப்பை அதிகரிப்பதுடன், தொழில் முதலீடுகள் மற்றும் பிராந்திய வளர்ச்சிக்கும் ஊக்கமளிக்கும் என்று மத்திய அரசு தெரிவித்துள்ளது. இதனைத் தொடர்ந்து பிரதமர் கர்நாடக மாநிலம் மைசூருவுக்கு பயணம் மேற்கொள்கிறார். அங்கு அமைக்கப்பட்டுள்ள சுவாமி விவேகானந்தர் கலாச்சார மற்றும் இளைஞர் மையத்தை அவர் திறந்து வைக்க உள்ளார். இம்மையம் இளைஞர்களிடையே தேசிய உணர்வு, பண்பாட்டு விழிப்புணர்வு மற்றும் தலைமைத்துவ திறன்களை வளர்க்கும் நோக்கில் உருவாக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்த மையம் கல்வி, கலாச்சாரம் மற்றும் சமூக சேவைகளை ஒருங்கிணைக்கும் முக்கிய மையமாக செயல்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.

பிரதமரின் வருகையையொட்டி ஆந்திரப் பிரதேசம் மற்றும் கர்நாடகாவில் பலத்த பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. மத்திய மற்றும் மாநில பாதுகாப்புப் படையினர் குவிக்கப்பட்டுள்ளதுடன், நிகழ்ச்சி நடைபெறும் பகுதிகளில் பல அடுக்கு பாதுகாப்பு நடைமுறைகள் அமல்படுத்தப்பட்டுள்ளன. மாநில அரசுகளின் மூத்த அதிகாரிகள், மக்கள் பிரதிநிதிகள் மற்றும் பல்வேறு துறைகளைச் சேர்ந்த முக்கிய பிரமுகர்கள் நிகழ்ச்சிகளில் பங்கேற்க உள்ளனர்.

## மேகேதாட்டு அணை: கர்நாடகாவுக்கு பின்னடைவு...!



புதுடெல்லி, ஜூலை. 31–

காவிரி ஆற்றின் குறுக்கே மேகேதாட்டில் ரூ.9,000 கோடியில் 67.14 டிஎம்சி கொள்ளளவு அணை கட்ட கர்நாடகா தாக்கல் செய்த விரிவான திட்ட அறிக்கையை, உச்சநீதிமன்றம் மற்றும் காவிரி நடுவர் மன்றத் தீர்ப்புகளுக்கு முரணான தகவல்கள், பழைய மற்றும் முரண்பாடான புள்ளிவிவரங்கள் இடம்பெற்றுள்ளதால் மத்திய நீர்வள ஆணையம் நிராகரித்து திருப்பி அனுப்பியுள்ளது. திட்டத்தை திருத்தி அல்லது புதிய அறிக்கையை சமர்ப்பிக்க ஜூன் 29–ஆம் தேதி கர்நாடகாவுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

## நாடாளுமன்றம் திங்கட்கிழமைக்கு ஒத்திவைப்பு!



டெல்லி, ஜூலை. 31–

நாடாளுமன்ற இரு அவைகளும் திங்கட்கிழமை வரை ஒத்திவைக்க ப்பட்டது. டெல்லி போராட்டக்கா ரர்களை போலீஸ் தாக்கியதை கண்டித்து எதிர்க்கட்சி எம்.பி.க்கள் தொடர் முழக்கத்தால் நாடாளுமன்ற இரு அவைகளும் திங்கட்கிழமைக்கு ஒத்திவைக்கப்பட்டது.

## செந்தில் பாலாஜிக்கு முன்ஜாமின்!



சென்னை, ஜூலை. 31–

செந்தில் பாலாஜியின் முன்ஜாமின் மேல்முறையீட்டு மனு இன்று உச்சநீதிமன்ற தலைமை நீதிபதி அமர்வில் விசாரணைக்கு வந்தது. அப்போது அமர்வில் இடம்பெற்றிருந்த நீதிபதி மோகனா, செந்தில் பாலாஜி தொடர்பான வழக்குகளில் முன்பு வழக்கறிஞராக ஆஜராகியிருந்த காரணத்தால், இந்த வழக்கை நீதிபதியாக விசாரிப்பது பொருத்தமல்ல என்று தெரிவித்து வழக்கு விசாரணையில் இருந்து விலகினார்.இதையடுத்து, இந்த வழக்கை விசாரிக்க புதிய அமர்வை அமைக்க உத்தரவிட்ட தலைமை நீதிபதி சூர்யகாந்த், இன்றே புதிய அமர்வு விசாரணை நடத்தும் என்று அறிவிக்கப்பட்டிருந்த நிலையில் தற்போது செந்தில்பாலாஜிக்கு முன்ஜாமின் வழங்கப்பட்டுள்து.

## ரகசிய டீலுக்கு முற்றுப்புள்ளி:

# வங்கிகளுக்கு ஆர்பிஐ பெரிய அதிரடி அறிவிப்பு! இனி விருப்பப்படி வட்டி நிர்ணயம் முடியாது

## அக்.1 முதல் புதிய விதிகள் அமல்!!

புதுடெல்லி, ஜூலை. 31–

வங்கிகள் பெரிய நிறுவனங்கள் மற்றும் அதிக நிகர மதிப்புள்ள வாடிக்கையாளர்களுக்கு (HNIs) விருப்பப்படி அதிக வட்டி வழங்கி, மற்றவர்களுக்கு குறைவான வட்டி வழங்கும் நடைமுறைக்கு முற்றுப்புள்ளி வைக்கும் வகையில், இந்திய ரிசர்வ் வங்கி (RBI) புதிய வழிகாட்டுதல்களை வெளியிட்டுள்ளது. 'Reserve Bank of India (Commercial Banks Interest Rate on Deposits) Second Amend–ment Directions, 2026' என்ற இந்த திருத்த விதிகள் அக்டோபர் 1, 2026முதல் அமலுக்கு வருகின்றன.




இந்த விதிகள் வணிக வங்கிகள், சிறு நிதி வங்கிகள், பிராந்திய கிராமப்புற வங்கிகள், கட்டண வங்கிகள், உள்ளூர் பகுதி வங்கிகள் மற்றும் நகர்ப்புற கூட்டுறவு வங்கிகள் உள்ளிட்ட அனைத்து வங்கி அமைப்புகளுக்கும் பொருந்தும். வைப்புத்தொகைக்கான வட்டி நிர்ணயத்தில் வெளிப்படைத்தன்மை, சமத்துவம் மற்றும் நியாயமான போட்டியை உறுதி செய்வதே இதன் முக்கிய நோக்கமாகும்.

***'Bulk Deposit?***

RBI–யின் புதிய வரையறைப்படி, ₹3 கோடி அல்லது அதற்கு மேற்பட்ட ஒரு தனி நிலையான வைப்புத்தொகை (Fixed Deposit) 'Bulk Deposit' எனப்படும். இந்த வகை வைப்புகளை பொதுவாக பெரிய நிறுவனங்கள், அறக்கட்டளைகள், கல்வி நிறுவனங்கள், தொழில் நிறுவனங்கள் மற்றும் அதிக நிகர மதிப்புள்ள தனிநபர்கள் (HNIs) மேற்கொள்கின்றனர்.

**ஏன் இந்த புதிய விதி?**

இதுவரை பல வங்கிகள் Bulk FD–களுக்கான வட்டி விகிதங்களை வெளிப்படையாக அறிவிக்காமல், பெரிய நிறுவனங்களுடன் தனிப்பட்ட பேச்சுவார்த்தை நடத்தி வட்டி நிர்ணயித்து வந்தன. ஒரே நாளில் ஒரே அளவு தொகையை வைப்பு செய்தாலும், சில நிறுவனங்களுக்கு அதிக வட்டியும், மற்றவர்களுக்கு குறைவான வட்டியும் வழங்கப்பட்டதாக புகார்கள் எழுந்தன.

இந்த பாகுபாட்டை நீக்கி, அனைவருக்கும் சமமான வட்டி கிடைப்பதை உறுதி செய்வதற்காகவே RBI இந்த புதிய நடைமுறையை அறிமுகப்படுத்தியுள்ளது.

**அக்.1 முதல் அமலாகும் 3 முக்கிய விதிகள்**

**1. தினசரி வட்டி விகிதம் வெளியீடு கட்டாயம்**

ஒவ்வொரு வங்கியும் Bulk FD–களுக்கான வட்டி விகிதத்தை தினமும் காலை 10:10 மணிக்குள் தங்களது அதிகாரப்பூர்வ இணையதளத்தில் வெளியிட வேண்டும். வெளியிடப்பட்ட விகிதத்தையே அனைத்து தகுதியான வாடிக்கையாளர்களுக்கும் வழங்க வேண்டும்.

**2. ஒரே நாளில் ஒரே தொகைக்கு ஒரே வட்டி**

ஒரே நாளில், ஒரே அளவு Bulk FD செய்யும் அனைத்து வாடிக்கையாளர்களுக்கும் ஒரே வட்டி வழங்கப்பட வேண்டும். வங்கி விருப்பப்படி ஒருவருக்கு அதிக வட்டி, மற்றொருவருக்கு குறைந்த வட்டி வழங்க முடியாது.

**3. மறைமுக ஒப்பந்தங்களுக்கு தடை**

ரகசிய பேச்சுவார்த்தை, தனிப்பட்ட ஒப்பந்தம் அல்லது நிறுவனத்தின் செல்வாக்கின் அடிப்படையில் வட்டி விகிதத்தை மாற்றுவது இனி அனுமதிக்கப்படாது.

**LCR விதிப்படி மட்டும் கூடுதல் வட்டி**

Liquidity Coverage Ratio (LCR) விதிகளின்படி, அதிக அபாயம் கொண்ட Bulk Deposit–களுக்கு மட்டும் கூடுதல் வட்டி வழங்க வங்கிகளுக்கு அனுமதி அளிக்கப்பட்டுள்ளது. இது வங்கிகளின் பணப்புழக்க மேலாண்மையை மேம்படுத்தும் நோக்கத்துடன் கொண்டு வரப்பட்டுள்ளது.

**யாருக்கு அதிக பலன்?**

இந்த புதிய விதியால் பெரிய நிறுவனங்கள், HNIs மற்றும் Bulk FD முதலீட்டாளர்கள் அதிகம் பயனடைவார்கள். அவர்கள் இனி வங்கியுடன் பேரம் பேச வேண்டிய அவசியமின்றி, அனைவருக்கும் சமமான வட்டி விகிதத்தை பெற முடியும்.

**சில்லறை வாடிக்கையாளர்களுக்கு தாக்கம் என்ன?**

₹3 கோடிக்குக் குறைவான சில்லறை FD–களுக்கு இந்த விதி நேரடியாக பொருந்தாது. இருப்பினும், வட்டி நிர்ணயத்தில் வெளிப்படைத்தன்மை அதிகரிப்பதால், வங்கி அமைப்பின் மீதான நம்பிக்கை உயரும் என RBI எதிர்பார்க்கிறது.

**வங்கி அமைப்புக்கு கிடைக்கும் பலன்**

புதிய நடைமுறையால் வங்கிகளுக்கு இடையேயான நியாயமற்ற போட்டி குறையும். கிளைகளுக்கு இடையே ஒரே விதமான வட்டி நடைமுறை அமலாகும். பணப்புழக்க மேலாண்மை மேலும் வலுப்பெற்று, வங்கி அமைப்பின் நம்பகத்தன்மையும் உயரும்.

**ஆர்பிஐ–யின் முக்கிய நோக்கம்**

வைப்பாளர்கள் அனைவருக்கும் சமமான அணுகுமுறை, வட்டி நிர்ணயத்தில் முழு வெளிப்படைத்தன்மை மற்றும் நியாயமான வங்கி நடைமுறையை உறுதி செய்வதே RBI–யின் இந்த புதிய திருத்த விதிகளின் முக்கிய நோக்கமாகும். அக்டோபர் 1 முதல் அமலுக்கு வரும் இந்த மாற்றம், இந்திய வங்கி துறையில் முக்கியமான சீர்திருத்தமாக பார்க்கப்படுகிறது.

## கர்நாடகா செல்லும் முதல்வர் விஜய்..!

சென்னை, ஜூலை. 31–

தமிழ்நாடு முதலமைச்சர் விஜய்யின் கர்நாடகப் பயணத்தை முன்னிட்டு, அவரை வரவேற்கும் வகையில் அம்மாநிலச் சட்டப்பேரவையான 'விதான சௌதாவில்' உள்ள மண்டபத்தைப் புதுப்பிக்கும் பணிகள் விறுவிறுப்பாக நடைபெற்று வருகின்றன. காவிரி விவகாரம் தொடர்பான பேச்சுவார்த்தைக்காகத் தமிழ்நாடு முதல்வர் விஜய் ஆகஸ்ட் 3–ம் தேதி கர்நாடகா வருகிறார் என்பதை அம்மாநில முதல்வர் டி.கே. சிவக்குமார் மீண்டும் உறுதிப்படுத்தியுள்ளது குறிப்பிடத்தக்கது.மேலும் அவருடன் 13 பேர் கொண்ட அமைச்சர்கள், அதிகாரிகள் குழு செல்ல உள்ளது. இந்தநிலையில் கர்நாடக முதல்வர் உயர்மட்டகுழுவினருடன் ஆலோசனை நடத்தினார். மேலும் கர்நாடக போராரட்ட குழுவினர் ஆகஸ்ட் 13–ல் மாநிலம் தழுவிய பந்த்துக்கு அழைப்பு விடுத்துள்ளனர்.

ஆகஸ்ட் 3–ஆம் தேதி கர்நாடகா செல்லும் முதல்–அமைச்சர் விஜய்யுடன் 13 பேர் கொண்ட உயர்மட்டக் குழுவில் இடம்பெற்றுள்ளவர்கள்:

முதல்–அமைச்சர் சி. ஜோசப் விஜய்

ஊரக வளர்ச்சி மற்றும் நீர்வளத்துறை அமைச்சர் என். ஆனந்த்

பொதுப்பணி மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் ஆதவ் அர்ஜுனா

எரிசக்தி வளம் மற்றும் சட்டத்துறை அமைச்சர் சி.டி.ஆர். நிர்மல்குமார்



தலைமைச் செயலாளர் முனைவர் மு. சாய்குமார், இ.ஆ.ப.

அரசு தலைமை வழக்கறிஞர் விஜய் நாராயண்

நீர்வளத்துறை முதன்மைச் செயலாளர் முனைவர் சத்யபிரத சாகு, இ.ஆ.ப.

பொதுப்பணித்துறை முதன்மைச் செயலாளர் சுன்சோங்கம் ஜடக் சிரு, இ.ஆ.ப.

சட்டத்துறைச் செயலாளர் எஸ். ஜார்ஜ் அலெக்சாண்டர்

காவிரி தொழில்நுட்பக் குழு மற்றும் பன்மாநில நதிநீர் பிரிவு தலைவர் ஆர். சுப்பிரமணியன்

மூத்த வழக்கறிஞர் ஜி. உமாபதி

முதல்–அமைச்சர் அலுவலகத்தின் மூத்த அதிகாரி

நீர்வளத்துறை மூத்த தொழில்நுட்ப அதிகாரி.

# த தலையங்கம் — மதுரை மணி

வெள்ளிக்கிழமை 31.07.2026

விசுவாவசு தமிழ் வருடம்

ஆடி மாதம் 15-ம் தேதி

## AI அச்சம் அடங்கியது... ஜூலையில் ஐடி பங்குகள் அதிரடி கம்பேக்!



2026ஆம் ஆண்டின் முதல் ஆறு மாதங்களில் செயற்கை நுண்ணறிவு (AI) தொழில்நுட்பத்தின் வேகமான வளர்ச்சி காரணமாக இந்திய தகவல் தொழில்நுட்ப (IT) துறை கடும் அழுத்தத்தை சந்தித்தது. AI மனிதர்களின் பணிகளை மாற்றிவிடும் என்ற அச்சம் காரணமாக டிசிஎஸ், இன்போசிஸ், ஹெச்சிஎல் டெக் உள்ளிட்ட முன்னணி ஐடி நிறுவனங்களின் பங்குகள் பெரும் சரிவை பதிவு செய்தன.

ஆனால் ஜூலை மாதத்தில் நிலைமை முற்றிலும் மாறியுள்ளது. AI தொழில்நுட்பத்தை முழுமையாக செயல்படுத்த மனித நிபுணர்களின் பங்கு இன்னும் அவசியம் என்பதும், நிறுவனங்கள் AI சேவைகளை நடைமுறைப்படுத்த இந்திய ஐடி நிறுவனங்களையே அதிகம் நம்பத் தொடங்கியதும் முதலீட்டாளர்களின் நம்பிக்கையை மீண்டும் உயர்த்தியுள்ளது. இதன் விளைவாக, ஜூலை மாதத்தில் மட்டும் இந்திய ஐடி துறையின் சந்தை மதிப்பு ₹3.82 லட்சம் கோடிஉயர்ந்துள்ளது.

நிஃப்டி ஐடி குறியீடு ஜூலை மாதத்தில் மட்டும் 16 சதவீதம் உயர்ந்துள்ளது. பெர்சிஸ்டென்ட் சிஸ்டம்ஸ் 26%, ஹெச்சிஎல் டெக் 25%, எல்டிஐ மைண்ட்ட்ரீ 24.6%, டிசிஎஸ் 20%, டெக் மஹிந்திரா 16.9%, கோபோர்ஜ் 16.67%, இன்போசிஸ் 15.35% வரை லாபம் கண்டுள்ளன. டிசிஎஸ் நிறுவனத்தின் சந்தை மதிப்பு மட்டும் சுமார் ₹1.48 லட்சம் கோடி அதிகரித்துள்ளது.

இருப்பினும், இந்த ஏற்றம் நீண்ட கால வளர்ச்சியின் தொடக்கமா அல்லது குறுகிய கால முதலீட்டு மனநிலை மாற்றத்தின் விளைவா என்பது இன்னும் தெளிவாகவில்லை. ஜூலை மாத பியூச்சர்ஸ் வர்த்தகம் முடிவடைந்த நிலையில், அடுத்த மாத ஒப்பந்தங்களில் Open Interest 30 சதவீதத்திற்கும் மேல் குறைந்துள்ளது. எனவே, ஐடி பங்குகளில் முதலீடு செய்பவர்கள் சந்தை நிலவரத்தை தொடர்ந்து கண்காணித்து, எச்சரிக்கையுடன் முதலீட்டு முடிவுகளை எடுக்க வேண்டும்.

## ‘இ20’ பெட்ரோலால் வாகன என்ஜின்களுக்கு பாதிப்பா? நிதின் கட்கரி விளக்கம்!



புதுடெல்லி, ஜூலை. 31–

பெட்ரோலுடன் 20 சதவீதம் எத்தனால் கலந்து விற்கப்படும் ‘இ20’ பெட்ரோலுக்கு நாடு முழுவதும் எதிர்ப்பு கிளம்பி இருக்கிறது. மேலும் இந்த பெட்ரோல் வாகனங்களின் என்ஜினை பாதிக்கும் என எதிர்க்கட்சிகளும் எதிர்ப்பு தெரிவித்து வருகின்றன.

இந்த பெட்ரோல் தொடர்பாக நாடாளுமன்றத்தில் எதிர்க்கட்சிகள் எழுப்பிய கேள்விகளுக்கு மக்களவையில் மத்திய நெடுஞ்சாலை மற்றும் போக்குவரத்துத்துறை மந்திரி நிதின் கட்கரி எழுத்துமூலம் பதிலளித்தார். அவர் கூறியதாவது:–பி.எஸ்–3, பி.எஸ்–4 ரக வாகனங்களில் இ20 எரிபொருளின் தரம் மற்றும் வீரியத்தை இந்தியன் ஆயில் கார்பரேஷன் உள்ளிட்ட நிறுவனங்கள் இணைந்து பரிசோதித்தன.

இந்த சோதனையில் வாகனத்தின் வகை மற்றும் பழமையை பொறுத்து, வாகனங்களின் எரிபொருள் தேவை 2 முதல் 6 சதவீதம் வரை குறையக் கூடும் என கண்டறியப்பட்டது. இதன் மூலம் நாட்டின் எரிபொருள் செலவினம் 6 சதவீதம் வரை குறையும் வாய்ப்பு உள்ளது. மேலும் டைனமோமீட்டரில் செய்யப்பட்ட என்ஜின் ஆயுள் சோதனைகளிலும், சாலையில் மேற்கொள்ளப்பட்ட வாகன சோதனைகளிலும் இ20 பெட்ரோல் காரணமாக எந்த கோளாறுகளும் ஏற்படவில்லை என்றும் தெரியவந்துள்ளது.

இ 10 எரிபொருளுடன் ஒப்பிடும்போது, இ20 எரிபொருள் சிறந்த முடுக்கம், மேம்பட்ட பயண தரம் மற்றும் சுமார் 30 சதவீதம் குறைவான கார்பன் வெளியேற்றத்தை வழங்குகிறது. இ20 எரிபொருளால் அசாதாரணமான அரிப்பு, தேய்மானம் அல்லது வாகனத்தின் ஆயுள் குறைவு என்று எதுவும் ஏற்படவில்லை என்பதை உற்பத்தியாளரின் சேவைத்தரவுகள் உறுதிப்படுத்துகின்றன. இவ்வாறு நிதின் கட்காரி கூறினார்.

## பயிர்க்கடன்: எடப்பாடி பழனிசாமி பரபரப்பு அறிக்கை...!



சென்னை, ஜூலை. 31–

2026 தேர்தல் வாக்குறுதியின்படி பயிர்க் கடனை முழுமையாக தள்ளுபடி செய்யவும், காவிரியில் தமிழகத்தின் உரிமையை நிலைநாட்டவும், த.வெ.க. – காங்கிரஸ் கூட்டணி அரசின் முதல் – அமைச்சரை வலியுறுத்துவதாக அ.தி.மு.க. பொதுச்செயலாளர் எடப்பாடி பழனிசாமி தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பாக அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறப்பட்டுள்ளதாவது:–

த.வெ.க. ஆட்சிக்கு வந்தால் 5 ஏக்கருக்கும் குறைவான நிலம் உள்ள விவசாயிகளுக்கு முழுமையான கூட்டுறவு பயிர்க் கடன் தள்ளுபடி; 5 ஏக்கருக்கு மேல் நிலம் வைத்திருக்கும் விவசாயிகளுக்கு 50 சதவீதம் கூட்டுறவு பயிர்க் கடன் தள்ளுபடி என்று அறிவித்தது.

ஆட்சிக்கு வந்தபின் ரூ. 75,000/–ம் வரை குறு, சிறு விவசாயிகள் பயிர்க் கடன் பெற்றிருந்தால் அவை முழுமையாக தள்ளுபடி செய்யப்படும் என்றும்; ரூ. 75,000/–க்கு மேல் கடன் பெற்றவர்களுக்கு ரூ. 35,000/– மட்டுமே தள்ளுபடி செய்யப்படும் என்றும் சரித்திரத்திலேயே இல்லாத ஒரு நாடகத்தை இந்த அரசு அரங்கேற்றி உள்ளது.

பொய்க்கால் குதிரை அரசின் இந்த பயிர்க் கடன் அறிவிப்பை எதிர்த்து தமிழகம் முழுவதும் விவசாயிகள் தொடர் ஆர்ப்பாட்டம் செய்து வருகின்றனர். விவசாயிகள் கூட்டுறவு வங்கிகளில் வாங்கிய கடனை முழுமையாக ரத்து செய்யக் கோரி, கழகத்தின் சார்பில் டெல்டா மாவட்டங்கள் உள்ளிட்ட பலமாவட்டங்களில் கண்டன ஆர்ப்பாட்டங்கள் நடத்தப்பட்டன.

## பாஜகவில் இணையுமாறு மிரட்டல்! அபிஜீத் தீப்கேவின் தாயார் வேதனை!



புதுடெல்லி, ஜூலை. 31–

பாஜகவில் இணையுமாறு தனது மகனுக்கு மிரட்டல்கள் வருவதாக அபிஜீத் தீப்கேவின் தாயார் அனிதா தீப்கே தெரிவித்தார். இது தொடர்பாக உள்ளூர் மராத்தி செய்தி நிறுவனத்துக்கு அனிதா தீப்கே பேட்டி அளித்துள்ளதாவது:

“அரசியல் கட்சியைத் தொடங்கியதில் இருந்தே என் மகன் அபிஜீத் தீப்கேவுக்கு மிரட்டல்கள் வருகின்றன. ஆரம்பத்தில் இது குறித்து எங்களிடம் பகிர்ந்துகொண்டதில்லை. ஆனால், கட்சியில் இணையவில்லை என்றால், பெற்றோர்கள் குறிவைக்கப்படுவார்கள் என்ற மிரட்டல் வந்த பிறகே எங்களிடம் இது குறித்து என் மகன் கூறினார்.

மிரட்டல்களுக்கு அவர் அஞ்சவில்லை. ஆனால், இதுபோன்ற சூழல்களை நாங்கள் இதற்கு முன்பு கையாண்டதில்லை என்பதற்காகவே வருந்தினார். வீட்டில் இருந்து வேறு எங்காவது பாதுகாப்பாக தங்கியிருக்குமாறு எங்களிடம் பேசினார்” என மகன் பேசியதை அனிதா குறிப்பிட்டார்.

இதற்கடுத்து 16 நாள்களுக்கு அவர்கள் மகாரஷ்டிரத்தின் கடற்கரைப் பகுதியான கொங்கனில் தங்கியிருந்தனர். அபிஜீத் தீப்கேவின் தந்தை பகவான் தீப்கே, குறைந்த ரத்த அழுத்தத்தால் பாதிக்கப்பட்டிருந்தபோது மிகவும் கவலை அடைந்ததாக அனிதா சுட்டிக்காட்டினார்.

## மின்கட்டணம் உயர்வா? - அமைச்சர் நிர்மல்குமார் விளக்கம்!



சென்னை, ஜூலை. 31–

மின்கட்டணம் குறித்த மு.க.ஸ்டாலினின் குற்றச்சாட்டுக்கு அமைச்சர் நிர்மல் குமார் விளக்கம் அளித்துள்ளார். சென்னை தலைமைச் செயலகத்தில் எரிசக்தி மற்றும் சட்டத்துறை அமைச்சர் நிர்மல் குமார் செய்தியாளர்கள் சந்திப்பில் கூறியதாவது:–

வாட்ஸ்–அப்பில் வந்த ஏதோவொரு தவறான தகவலைத்தான் திமுக தலைவர் மு.க.ஸ்டாலின் சொல்லியிருக்கிறார். பலருக்கும் மின் கட்டணம் அதிகம் வந்திருப்பதாக பலரும் சமூக ஊடகங்களில் கூறி வருகின்றனர். இது தொடர்பாக ஆய்வுகள் செய்யப்பட்டு வருகின்றன.

கடந்தாண்டுடன் இந்தாண்டு ஒப்பிடுகையில், கடந்தாண்டில் இதே காலகட்டத்தில் (கோடை) 11.50 லட்சம் பேருக்கு 3 மடங்கு அளவில் மின் கட்டணம் வந்தது. ஆனால், இந்தாண்டில் 9.60 லட்சம் பேருக்குத்தான் அதிகரித்துள்ளது. கடந்தாண்டைவிட இந்தாண்டில் 2 லட்சம் பேர் குறைந்துள்ளனர்.

மக்களைக் குழப்புவதற்காகவே மு.க.ஸ்டாலின் அறிக்கை வெளியிட்டுள்ளார். அவர் கூறியதுபோல 3.70 லட்சம் புகார்களெல்லாம் வரவில்லை. மின் கட்டணம் உயர்வு என வதந்தி பரவுகிறது. வெயில் காலத்தில் அதிகளவு ஏசி பயன்படுத்துவதால் கட்டணம் உயர்கிறது. மின் பயன்பாடு அதிகரிக்கும்போது மின் கட்டணம் அதிகரித்து வரத்தான் செய்யும்.

இவ்வாறு அவர் கூறினார்.

## பாகிஸ்தானில் பனிச்சரிவு: பிரபல நேபாள மலையேற்ற வீரர் தலைமையிலான 10 பேர் மாயம்!



இஸ்லாமாபாத், ஜூலை. 31–

வட பாகிஸ்தானில் உள்ள உலகின் மிக உயர்ந்த மலைகளில் ஒன்றான ‘பிராட் பீக்’ சிகரத்தில் பனிச்சரிவு ஏற்பட்டதைத் தொடர்ந்து, நேபாள த்தைச் சேர்ந்த பிரபல மலையேற்ற வீரர் நிம்ஸ் டாய் தலைமையில் சென்ற சர்வதேச மலையேற்ற வீரர்கள் 10 பேர் காணாமல் போயுள்ள னர். பாகிஸ்தான் பல முக்கிய மலைச்சிகரங்களைக் கொண்டுள்ளது; இங்குள்ள மலைச்சிகரங்களில் ஏறுவதற்காக உலகின் பல்வேறு பகுதிகளிலிருந்தும் மலையேற்ற வீரர்கள் வந்து செல்கின்றனர்.

வட பாகிஸ்தானின் காரகோரம் மலைத்தொடரில் கடல் மட்டத்திலிருந்து 8,047 மீட்டர் (26,401 அடி) உயரத்தில் ‘பிராட் பீக்’ மலைச்சிகரம் அமைந்துள்ளது. இது உலகின் 12 ஆவது மிக உயரமான மலைச்சிகரமாகும். அங்கு அவ்வப்போது பலத்த மழையும் கடும் பனிப்பொழிவும் நிலவும். இதன் காரணமாக, பனிச்சரிவும் ஏற்படுகிறது.

இந்த நிலையில் நேபாள பிரபல மலையேற்ற வீரர் நிம்ஸ் டாய் தலைமையில் சென்ற 10 பேர் அடங்கிய சர்வதேச மலையேற்ற குழு ஒன்று, ‘பிராட் பீக்’ மலைச்சி கரத்தில் மலையேறத் தொடங்கினர்.

இந்தநிலையில், அங்கு நிகழ்ந்த பனிச்சரிவில் சிக்கி மலையேற்ற வீரர்கள் மாயமாகியுள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளது.


## காணவில்லை


தேனி மாவட்டம், பெரியகுளம் வட்டம், பெரியகுளம் வடகரை, ஸ்டேட் பேங்க் காலனி பகுதியில் வசிக்கும் சலீம் மனைவி சாரா பேகம் ஆகிய நான் ஆவண எண்; 42/2009 ஆம் ஆண்டு பதியப்பட்ட எனது அசல் தானசெட்டில்மெண்ட் பத்திரம் கடந்த 28.06.2026 ஆம் தேதி பெரியகுளம் வடகரை பழைய பேருந்து நிலையம் அருகே ஜெராக்ஸ் கடையில் ஜெராக்ஸ் எடுத்து விட்டு திரும்பும் போது காணாமல் போய்விட்டது. பல இடங்களில் தேடியும் கிடைக்கவில்லை. இதன் அயன் சர்வே எண்கள்: 55/2ஏ, 55/2ஏ2ஏ, 55/3ஏ, 55/3ஏ1 ஆகும். இதுகுறித்து காவல்துறை இணையதளம் மூலம் புகார் செய்யப்பட்ட ரெபரன்ஸ் நம்பர் ஒஎல்சி5842600033945 ஆகும். இதனை எடுத்தவர்கள் அருகிலுள்ள காவல்நிலையத்திலோ அல்லது கீழ்க்கண்ட முகவரிக்கோ தகவல் தெரிவிக்க கேட்டுக்கொள்கிறேன்.

**சாரா பேகம்**

க/பெ.சலீம் ஸ்டேட் பேங்க் காலனி வடகரை,

பெரியகுளம், தேனி மாவட்டம்

செல்; 97918 65300.

## ஆகஸ்ட் 2026 மாத ராசி பலன்!




ஆகஸ்ட் 2026 மாதத்தில் கிரகங்களின் பெயர்ச்சிகள் மற்றும் நிலைகளின் அடிப்படையில் மேஷம் முதல் மீனம் வரையிலான 12 ராசிகளுக்கும் கிடைக்கக்கூடிய பலன்கள், வாய்ப்புகள் மற்றும் எச்சரிக்கைகள் பற்றிய விரிவான செய்தித் தொகுப்பை பார்ப்போம்.

**1. மேஷம்**

ஆகஸ்ட் மாதம் மேஷ ராசியினருக்குப் பல சாதகமான மாற்றங்களைக் கொண்டு வரும். உங்கள் ஆற்றலும் தன்னம்பிக்கையும் அதிகரிக்கும்.

தனம் & தொழில்: தொழில் துறையில் புதிய வாய்ப்புகள் தேடி வரும். மேலதிகாரிகளின் ஆதரவு கிடைக்கும். நிதி நிலைமை சீராக இருக்கும்; தேவையற்ற செலவுகளைக் குறைப்பது நல்லது.

குடும்பம் & ஆரோக்கியம்: குடும்பத்தில் மகிழ்ச்சியும் சுபகாரியப் பேச்சுகளும் நடைபெறும். ஆரோக்கியத்தில் சிறு சிறு தொந்தரவுகள் வரலாம் என்பதால் உணவுப் பழக்கத்தில் கவனம் தேவை.

**2. ரிஷபம்**

திட்டமிட்ட காரியங்கள் அனைத்தும் வெற்றிகரமாக முடியும். நிதானமும் பொறுமையும் உங்களுக்குப் பெரிய வெற்றியைத் தரும்.

தனம் & தொழில்: வியாபாரத்தில் எதிர்பார்த்த லாபம் கிடைக்கும். நிலம், வீடு போன்ற சொத்துகளில் முதலீடு செய்ய உகந்த காலம். வேலை மாறுதலுக்கு முயல்வோருக்கு நல்ல செய்தி கிடைக்கும்.

குடும்பம் & ஆரோக்கியம்: கணவன்–மனைவி இடையே புரிதல் அதிகரிக்கும். பெற்றோர் வழியில் நன்மைகள் உண்டாகும். உடல் ஆரோக்கியம் திருப்திகரமாக இருக்கும்.

**3. மிதுனம்**

பேச்சுத் திறமையால் கடினமான காரியங்களையும் எளிதில் முடிப்பீர்கள். சமூகத்தில் உங்கள் மதிப்பும் மரியாதையும் உயரும்.

தனம் & தொழில்: உத்தியோகத்தில் பணிச்சுமை சற்று அதிகமாக இருந்தாலும், உங்கள் உழைப்பிற்கேற்ற அங்கீகாரம் கிடைக்கும். வரவை விட செலவு அதிகரிக்க வாய்ப்புள்ளதால் நிதி மேலாண்மை அவசியம்.

குடும்பம் & ஆரோக்கியம்: சகோதர வழியில் சிறு மனக்கசப்புகள் வந்து நீங்கும். பயணங்களின் போது கவனமாக இருப்பது நல்லது. தூக்கமின்மை பிரச்சனை வரலாம்.

**4. கடகம்**

மன அமைதியும் மகிழ்ச்சியும் நிறைந்த மாதமாக இது அமையும். நீண்ட நாட்களாக நிலுவையில் இருந்த வேலைகள் விரைந்து முடியும்.

தனம் & தொழில்: நிதி நிலைமை கணிசமாக உயரும். கடன் பிரச்சனைகள் குறையத் தொடங்கும். தொழிலில் கூட்டாளிகளுடன் இருந்து வந்த கருத்து வேறுபாடுகள் நீங்கும்.

குடும்பம் & ஆரோக்கியம்: குடும்பத்தில் அமைதி நிலவும். சுப நிகழ்வுகள் கைகூடி வரும். ஆரோக்கியம் சிறந்து விளங்கும்.

**5. சிம்மம்**

இந்த மாதம் உங்கள் ராசிக்கு புதிய புத்துணர்ச்சியையும் உற்சாகத்தையும் தரும். தலைமைப் பண்பு பளிச்சிடும்.

தனம் & தொழில்: சுய தொழில் செய்பவர்களுக்கு புதிய ஒப்பந்தங்கள் கிடைக்கும். அலுவலகத்தில் உங்கள் ஆலோசனைகளுக்கு மதிப்பு கூடும். எதிர்பாராத பண வரவிற்கு வாய்ப்புண்டு.

குடும்பம் & ஆரோக்கியம்: வாழ்க்கைத்துணையுடன் இனிமையான நேரத்தைக் கழிப்பீர்கள். கோபத்தைக் கட்டுப்படுத்துவது குடும்ப அமைதிக்கு உதவும். கண் ஆரோக்கியத்தில் கவனம் செலுத்துங்கள்.

**6. கன்னி**

எந்தவொரு முடிவையும் அவசரப்படாமல் எடுப்பது நல்லது. கடின உழைப்பிற்குப் பிறகே பலன் கிடைக்கும் என்பதால் பொறுமை அவசியம்.

தனம் & தொழில்: தேவையற்ற செலவுகளைக் கட்டுப்படுத்துவது அவசியம். முதலீடுகளில் கூடுதல் கவனம் தேவை. உத்தியோகத்தில் சக ஊழியர்களின் ஒத்துழைப்பு ஓரளவே இருக்கும்.

குடும்பம் & ஆரோக்கியம்: குடும்ப உறுப்பினர்களுடன் வீண் விவாதங்களைத் தவிர்க்கவும். செரிமானம் தொடர்பான பிரச்சனைகள் வரலாம் என்பதால் ஆரோக்கியமான உணவை உட்கொள்ளவும்.

**7. துலாம்**

உங்களுக்கு தொட்டதெல்லாம் துலங்கும் அதிர்ஷ்டமான மாதமாக ஆகஸ்ட் அமையும். தொல்லைகள் விலகி அமைதி திரும்பும.

தனம் & தொழில்: நிதி நிலைமை மிகவும் வலுவடையும். தொகைகள் திரும்பக் கிடைக்கும். புதிய தொழில் தொடங்குவதற்கான திட்டங்கள் தடையின்றி நிறைவேறும்.

குடும்பம் & ஆரோக்கியம்: உறவினர்களின் ஆதரவு கிடைக்கும். திருமண வயதில் உள்ளவர்களுக்கு நல்ல வரன் அமையும். ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும்.

**8. விருச்சிகம்**

விடாமுயற்சி வெற்றி தரும் மாதமிது. சில சவால்கள் வந்தாலும் உங்கள் புத்தி கூர்மையால் அதை எதிர்கொள்வீர்கள்.

தனம் & தொழில்: உத்தியோகத்தில் உயர் அதிகாரிகளுடன் வீண் வாக்குவாதங்களைத் தவிர்க்கவும். வியாபாரத்தில் நிதானமான வளர்ச்சி இருக்கும். திடீர் பயணங்கள் மேற்கொள்ள நேரலாம்.

குடும்பம் & ஆரோக்கியம்: குடும்பத்தில் விட்டுக்கொடுத்துச் செல்வது நல்லது. இரத்த அழுத்தம் அல்லது மன அழுத்தம் சார்ந்த சிறு உடல் உபாதைகள் தோன்றலாம்.

**9. தனுசு**

சுப பலன்கள் அதிகம் நடக்கும் மாதம். தொட்ட காரியங்கள் அனைத்தும் வெற்றியடையும். ஆன்மீக ஈடுபாடு அதிகரிக்கும்.

தனம் & தொழில்: புதிய தொழில் வாய்ப்புகள் கதவைத் தட்டும். வெளிநாடு செல்ல முயல்வோருக்கு சாதகமான சூழல் நிலவும். நிதி வரவு தாராளமாக இருக்கும்.

குடும்பம் & ஆரோக்கியம்: வீட்டில் சுப நிகழ்ச்சிகள் நடைபெறும். குழந்தைகள் வழியில் நற்செய்தி தேடி வரும். ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும்.

**10. மகரம்**

எச்சரிக்கையுடனும் திட்டமிட்டும் செயல்பட வேண்டிய மாதம். அவசர முடிவுகள் எடுப்பதைத் தவிர்க்கவும்.

தனம் & தொழில்: பணிச்சுமை அதிகரிக்கும். தொழிலில் நிதானத்தைக் கடைப்பிடிக்க வேண்டும். நிதி விஷயங்களில் யாருக்கும் ஜாமீன் கையெழுத்து போட வேண்டாம்.

குடும்பம் & ஆரோக்கியம்: குடும்பத்தினிடம் அன்பாக நடந்து கொள்வது நல்லது. வாகன ஓட்டும்போது கவனம் தேவை. கை, கால் வலி போன்ற பிரச்சனைகள் வரலாம்.

**11. கும்பம்**

கூட்டுத் தொழில்கள் மற்றும் நண்பர்கள் வழியில் நல்ல நன்மைகள் கிடைக்கும். உங்கள் திட்டங்கள் அனைத்தும் கைகூடும்.

தனம் & தொழில்: வியாபாரத்தில் புதிய வாடிக்கையாளர்கள் கிடைப்பார்கள். நிதி நிலை உயரும். உத்தியோகத்தில் உங்களுக்கு வரவேண்டிய சலுகைகள் தாமதமின்றி கிடைக்கும்.

குடும்பம் & ஆரோக்கியம்: கணவன்–மனைவி இடையே அன்பு அதிகரிக்கும். சுபகாரியப் பேச்சுகள் வெற்றிகரமாக முடியும். உடல் ஆரோக்கியம் சீராக இருக்கும்.

**12. மீனம்**

எதிரிகளை வெல்லும் ஆற்றல் உண்டாகும். போட்டிகளில் வெற்றி பெறுவீர்கள். மறைமுக எதிர்ப்புகள் விலகும்.

தனம் & தொழில்: உத்தியோகத்தில் பதவி உயர்வு அல்லது சம்பள உயர்வு கிடைக்க வாய்ப்புள்ளது. நிலுவையில் இருந்த கடன் தொகைகளை அடைப்பீர்கள்.

குடும்பம் & ஆரோக்கியம்: தாய் வழியில் நல்ல செய்திகள் வரும். குடும்பத்தில் மகிழ்ச்சி நிலவும். பழைய ஆரோக்கியப் பிரச்சனைகள் தீர்ந்து புத்துணர்ச்சி பெறுவீர்கள்.

## பாடகி ஜமுனா ராணி காலமானார்!



பெங்களூரு, ஜூலை.31 –

இசையுலகில் தனக்கென ஒரு முத்திரையை பதித்திருந்த பின்னணி பாடகி ஜமுனா ராணி காலமானார். இவரது மறைவால் தென்னிந்திய இசை உலகம் சிறந்த ஒரு குரலை இழந்துள்ளது. தென்னிந்திய திரையுலகின் மூத்த பின்னணிப் பாடகியான ஜமுனா ராணி (வயது 88), பெங்களூருவில் காலமானார். அவரது மறைவு தென்னிந்திய திரையுலகில் சோகத்தை ஏற்படுத்தியுள்ளது. அவரது இறுதிச்சடங்கு இன்று மதியம் கல்லஹள்ளி பகுதியில் நடைபெற உள்ளது.

தமிழில் 1952–ம் ஆண்டு வெளியான ‘கல்யாணி’ திரைப்படத்தின் மூலம் பாடகியாக அறிமுகமான ஜமுனா ராணி, ‘காளை வயசு கட்டான சைசு’, ‘பாட்டொன்று கேட்டேன்’, ‘சின்னச் சின்ன சிட்டு’, ‘காவேரி தாயே’, ‘யாரடி நீ மோகினி’, ‘குங்குமப்பூவே கொஞ்சும் புறாவே’, ‘மாமா மாமா’ உள்ளிட்ட பல வெற்றிப் பாடல்களைப் பாடி ரசிகர்களின் மனதில் நீங்கா இடம்பிடித்தவர் என்பது குறிப்பிடத்தக்கது.

## நலம் நலமறிய..! மருத்துவ குறிப்புகள்

### “கால்வலி, வீக்கத்தை அலட்சியம் செய்யாதீர்கள்... வெரிகோஸ் வெயின் ஆபத்து!”



இந்தியாவில் நிறைய பேர் சந்திக்கிற ஒரு பொதுவான பிரச்சனைதான் வெரிகோஸ் வெயின் (varicose veins). நம்மில் பலர் இதை பரம்பரை வியாதி என்றோ அல்லது வயதாவதால் வருவது என்றோ நினைத்து அலட்சியப்படுத்தி விடுகிறோம். ஆனால், இந்த நிலையை சாதாரணமாக எடுத்துக்கொள்ளக் கூடாது என்று நிபுணர்கள் எச்சரிக்கின்றனர்.

**வெரிகோஸ் வெயின் என்றால்?**

வெரிகோஸ் வெயின் என்பது, சருமத்திற்கு வெளியே தெரியும் அளவுக்கு நரம்புகள் புடைத்து, சுருண்டு காணப்படும் ஒரு நிலை. இந்த நரம்புகள் நீலம் அல்லது ஊதா நிறத்தில், பின்னப்பட்ட கயிறு போல தோற்றமளிக்கும். உடலின் எந்தப் பகுதியிலும் இது வரலாம் என்றாலும், கால்களில்தான் இது பொதுவாகக் காணப்படுகிறது. வெரிகோஸ் வெயின்களின் ஒரு வகையான ‘ஹெமராய்ட்ஸ்’ கர்ப்ப காலத்தில் பெண்களின் மலக்குடல் அல்லது பிறப்புறுப்பைச் சுற்றி ஏற்படலாம்.

**இந்தியாவில் 25 முதல் 30 %;**

இந்தியாவில் சுமார் 25 முதல் 30 சதவீதம் பேர் வெரிகோஸ் வெயின் பிரச்சனையால் பாதிக்கப்பட்டுள்ளதாக சுகாதார நிபுணர்கள் தெரிவிக்கின்றனர். கால்களில் திடீரென ஏற்படும் வலி மற்றும் வீக்கம் போன்ற அறிகுறிகளைப் புறக்கணிக்க வேண்டாம் என்று அவர்கள் அறிவுறுத்துகின்றனர். சரியான நேரத்தில் நோயைக் கண்டறிய ‘டாப்ளர் அல்ட்ராசவுண்ட்’ பரிசோதனை செய்துகொள்ள வேண்டும் என்றும் பரிந்துரைக்கின்றனர்.

**சிகிச்சை அளிக்காமல் விட்டால்?**

சிகிச்சை அளிக்காமல் விட்டால், நோய் அடுத்த கட்டத்திற்குச் சென்று, சருமத்தின் நிறம் மாறத் தொடங்கும். கால்கள் கருப்பாக மாறி, அதில் புண்கள் ஏற்படவும் வாய்ப்புள்ளது. எல்லாவற்றையும் விட மிக மோசமான ஆபத்து என்னவென்றால், கால்களில் உள்ள நரம்புகளில் ரத்தம் உறைந்து (clots), அந்த கட்டிகள் இதயம் வரை சென்று உயிருக்கே ஆபத்தாக மாறக்கூடும்.

**ஆரம்பத்திலேயே கண்டறிவது எப்படி?**

அதனால், ஆரம்பத்திலேயே ‘டாப்ளர்’ எனப்படும் பரிசோதனையைச் செய்வது அவசியம். இது ஒரு சாதாரண அல்ட்ராசவுண்ட் ஸ்கேன் போன்றதுதான். இதன் மூலம், ரத்தம் ஓரிடத்தில் தேங்கியிருக்கிறதா இல்லையா என்பதை மிக எளிதாகக் கண்டறிய முடியும். வயது மற்றும் செய்யும் தொழிலைப் பொறுத்து இதன் பாதிப்பு மாறுபட்டாலும், ஆய்வுகளின்படி, ஒவ்வொரு நான்கு பெரியவர்களில் ஒருவருக்கு வெரிகோஸ் வெயின் பாதிப்பு இருப்பதாகத் தெரிகிறது.

**இந்த பாதிப்பு யாருக்கு அதிகம் வரும்?**

இதுகுறித்து ஆகாஷ் ஹெல்த்கேர் மருத்துவமனையின் இன்டர்வென்ஷனல் ரேடியாலஜி துறைத் தலைவரும், சீனியர் கன்சல்டன்டுமான டாக்டர். அபிஷேக் பன்சால் கூறும்போது, “பெண்கள், வயதானவர்கள், உடல் பருமன் அதிகம் உள்ளவர்கள் மற்றும் நீண்ட நேரம் நின்றுகொண்டே வேலை செய்பவர்களுக்கு இந்த பாதிப்பு அதிகமாகக் காணப்படுகிறது” என்றார்.

# அமெரிக்கா முழுவதும் பயன்பாட்டிற்கு வரும் ‘டிரம்ப்’ முத்திரை கொண்ட நினைவு பாஸ்போர்ட்கள்...!

அமெரிக்கா, ஜூலை. 31––

அமெரிக்காவின் 250–ஆவது ஆண்டு விழாவை கொண்டாடும் வகையிலும், அதிபர் டொனால்டு டிரம்ப் புகைப்படம் இடம்பெற்ற ‘லிமிட்டெட் எடிஷன்’ (limited–edition) பாஸ்போர்ட்களை, தலைநகருக்கு வெளியே வசிக்கும் அமெரிக்கர்களும் விரைவில் பெற முடியும் என்று வெளியுறவு துறை அறிவித்தது.

நாடு முழுவதும் உள்ள அந்த துறையின் 27 பாஸ்போர்ட் அலுவலகங்கள் அடுத்த மாதம் முதல் இந்த சிறப்பு பயண ஆவணங்களை வழங்க தொடங்கும். முன்னதாக, இவை வாஷிங்டன் டி.சி.யில் உள்ள பாஸ்போர்ட் அலுவலகத்தில் நேரில் விண்ணப்பிப்பவர்களுக்கு மட்டுமே கிடைத்தன.

உள் பக்கத்தில் அவரது கம்பீரமான உருவப்படம் அச்சிடப்பட்டுள்ள, இந்த பயண ஆவணத்தில் இடம்பெற்ற முதல் உயிருள்ள அதிபர் டிரம்ப் ஆவார்.

கட்டிடங்கள், ஆவணங்கள் மற்றும் பிற முக்கிய அடையாளங்களில் தனது பெயரையும் உருவத்தையும் டிரம்ப் இணைத்துக்கொள்வதன் சமீபத்திய உதாரணமாக இந்த பாஸ்போர்ட்கள் அமைந்துள்ளன. நாட்டின் உருவாக்கத்தை கொண்டாடும் வகையில் அமெரிக்க மின்ட் (US Mint) தயாரித்து வரும் தங்க முலாம் பூசப்பட்ட நினைவு நாணயத்திலும் அவரது உருவம் இடம்பெற்றுள்ளது.

மேலும், பதவியில் இருக்கும் அதிபர் ஒருவரின் கையொப்பத்தை அனைத்து புதிய அமெரிக்க காகிதநாணயங்களிலும் இடம்பெற செய்வதற்கான முயற்சிகளும் நடைபெற்று வருகின்றன.




“அதிகரித்து வரும் தேவையை முன்னிட்டு, வெளியுறவுத் துறை கூடுதலாக 2,50,000 சிறப்பு நினைவு பாஸ்போர்ட்களை பொதுமக்களின் பயன்பாட்டிற்காக வழங்குகிறது. ‘பேட்ரியாட் பாஸ்போர்ட்’ (Patriot Pass–port) என்று அழைக்கப்படும் இந்த கூடுதல் சிறப்பு பாஸ்போர்ட்களுக்கு, நாடு முழுவதும் உள்ள அமெரிக்கர்கள் விண்ணப்பிக்கும் வாய்ப்பை பெறுவார்கள்,” என்று ஒரு அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சென்டெனியல், சிகாகோ, டல்லாஸ், டெட்ராய்ட், நியூ ஆர்லியன்ஸ், நியூயார்க் மற்றும் ஸ்டாம்போர்ட் ஆகிய இடங்களில் உள்ள பாஸ்போர்ட் அலுவலகங்கள், ஆகஸ்ட் 8 முதல் நடைபெறும் ஒரு நாள் சிறப்பு நிகழ்வுகளில் இந்த டிரம்ப் பாஸ்போர்ட்களை வழங்கும். ஆகஸ்ட் மாதம் முழுவதும் பிற பாஸ்போர்ட் அலுவலகங்களும் இந்த சேவையில் இணைக்கப்படும். இந்த சிறப்பு பாஸ்போர்ட்டை விரும்புவோர், துறையின் பாஸ்போர்ட் இணையதளத்தில் குறிப்பிடப்பட்டுள்ள நாளில் நேரில் சென்று விண்ணப்பிக்க வேண்டும். வழக்கமான பாஸ்போர்ட்டை விரும்புவோர் வேறு நாட்களில் விண்ணப்பிக்க வேண்டும்.

இந்த நினைவு பாஸ்போர்ட்டின் உட்புறப் பக்கத்தில், டிரம்பின் கையொப்பம் தங்க நிறத்தில் அச்சிடப்பட்டிருக்க, அதற்கு மேல் அவரது புகைப்படம் இடம்பெற்றுள்ளது. இதன் அட்டைப் பகுதியில், தற்போதைய நிலையான வடிவமைப்பிற்கு மாறாக, மேல் பகுதியில் தடித்த தங்க நிற எழுத்துக்களில் “Unit–ed States of America” என்றும், கீழ் பகுதியில் “Passport” என்றும் அச்சிடப்பட்டுள்ளது. மேலும், பின் பக்க அட்டையின் அடிப்பகுதியில், நட்சத்திரங்களால் சூழப்பட்ட ‘250’ என்ற எண்ணுடன் கூடிய சிறிய தங்க நிற அமெரிக்க கொடி முத்திரை இடம்பெற்றுள்ளது. தற்போதைய அமெரிக்க பாஸ்போர்ட்களில், தெற்கு டகோட்டாவில் உள்ள ரஷ்மோர் மலையின் இரு பக்க சித்திரத்தில் மட்டுமே ஜனாதிபதிகள் இடம்பெற்றுள்ளனர் – ஜார்ஜ் வாஷிங்டன், தாமஸ் ஜெபர்சன், தியோடர் ரூஸ்வெல்ட் மற்றும் ஆபிரகாம் லிங்கன்.

மற்ற சித்திரங்களில் சுதந்திர தேவி சிலை, பிலடெல்பியாவில் உள்ள லிபர்ட்டி பெல் மற்றும் இன்டிபென்டன்ஸ் ஹால், மற்றும் பெரும் சமவெளிகள், மலைகள் மற்றும் தீவுகளின் காட்சிகள் ஆகியவை அடங்கும். தற்போதைய பாஸ்போர்ட்களில் மார்ட்டின் லூதர் கிங் ஜூனியர் மற்றும் ஜனாதிபதிகள் வாஷிங்டன், ஜெபர்சன், ரூஸ்வெல்ட், ஜான் எஃப். கென்னடி மற்றும் டுவைட் ஐசன்ஹோவர் ஆகியோரின் மேற்கோள்களும் உள்ளன.

# வேலை வாய்ப்பு

## யூபிஎஸ்சி: 828 பணியிடங்கள்!

அமைப்பு யூனியன் பப்ளிக் சர்வீஸ் கமிஷன் (UPSC)
அறிவிப்பு எண் 51/2026
வேலைவகை மத்திய அரசு வேலை
பணி தன்மை நிரந்தர பணி
மொத்த காலிப்பணியிடங்கள் 828
பணியிடம் இந்தியா முழுவதும்
விண்ணப்பிக்கும் முறை ஆன்லைன்
விண்ணப்ப தொடக்க தேதி 25.07.2026
கடைசி தேதி 14.08.2026
அதிகாரப்பூர்வ இணையதளம் www.upsc.gov.in
காலிப்பணியிட விவரங்கள்
டெல்லி தேசிய தலைநகர் அரசு கல்வித்துறை
முதல்வர் (Principal) 124 பணியிடங்கள்
துணை முதல்வர் (Vice Principal) 704 பணியிடங்கள்
மொத்தம் : 828 பணியிடங்கள்
கல்வித்தகுதி
முதல்வர் (Principal)
கல்வித்தகுதி:
அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகத்தில் முதுநிலை பட்டம்.
B.Ed. பட்டம்.
பணியனுபவம்:
துணை முதல்வர் / முதுநிலை ஆசிரியர் / பட்டதாரி ஆசிரியராக 10 ஆண்டுகள் அனுபவம்.
விரும்பத்தகுந்த தகுதி:
முனைவர் பட்டம் (Ph.D.)
பள்ளி நிர்வாக அனுபவம்.
துணை முதல்வர் (Vice Principal)
கல்வித்தகுதி:
அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகத்தில் முதுநிலை பட்டம்.
B.Ed. பட்டம்.
பணியனுபவம்:
முதுநிலை ஆசிரியராக 2 ஆண்டுகள் அல்லது
பட்டதாரி ஆசிரியராக 3 ஆண்டுகள்.
வயது வரம்பு (14.08.2026 நிலவரப்படி)
முதல்வர் 50 வயது
துணை முதல்வர் 35 வயது
வயது தளர்வு. :அரசின் விதிமுறைப்படி.
விண்ணப்பிக்கும் முறை
தகுதியும் விருப்பமும் உள்ளவர்கள் 25.07.2026 முதல் 14.08.2026 வரை UPSC–யின் அதிகாரப்பூர்வ இணையதளத்தில் ஆன்லைனில் விண்ணப்பிக்க வேண்டும்.

# கேரளாவில் கொட்டித் தீர்க்கும் கனமழை: 5 மாவட்ட பள்ளி, கல்லூரிகளுக்கு விடுமுறை!

திருவனந்தபுரம்,

கேரளாவின் பல்வேறு பகுதிகளில் கொட்டித்தீர்க்கும் கனமழை காரணமாக, அங்கு 5 மாவட்ட பள்ளி, கல்லூரிகளுக்கு விடுமுறை அறிவிக்கப்பட்டுள்ளது.

இதன்படி எர்ணாகுளம், வயநாடு, காசர்கோடு, ஆலப்புழா, கோட்டயம் மாவட்டங்களுக்கு விடுமுறை அளிக்கப்பட்டுள்ளது. அங்கன்வாடிகள், பள்ளிகள், மதரஸாக்கள், பயிற்சி மையங்கள், சிறப்பு வகுப்புகள் மற்றும் தொழில்முறை கல்லூரிகள் உள்ளிட்ட அனைத்துக் கல்வி நிறுவனங்களுக்கும் இந்த விடுமுறை பொருந்தும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. இருப்பினும், வயநாடு



மற்றும் காசர்கோடு மாவட்டங்களில் உள்ள தங்கும் வசதி கொண்ட பள்ளிகள் மற்றும் கல்லூரிகளுக்கு இந்த விடுமுறையிலிருந்து விலக்கு அளிக்கப்பட்டுள்ளது. முன்னரே திட்டமிடப்பட்ட பல்கலைக்கழகத் தேர்வுகள், பொதுத் தேர்வுகள் மற்றும் நேர்காணல்கள் ஆகியவை திட்டமிட்டபடியே நடைபெறும் என்று காசர்கோடு மாவட்ட கலெக்டர் தெரிவித்துள்ளார்.

கோழிக்கோடு மாவட்டத்தில், வடகரை மற்றும் தாமரச்சேரி ஆகிய வட்டங்களில் உள்ள அனைத்துக் கல்வி நிறுவனங்களுக்கும் மாவட்ட கலெக்டர் விடுமுறை அறிவித்துள்ளார். இப்பகுதி பள்ளிகள், மதரஸாக்கள், பயிற்சி மையங்கள் (tuition centres), தொழில்முறை கல்லூரிகள் மற்றும் அங்கன்வாடிகள் ஆகியவற்றுக்கு இந்த உத்தரவு பொருந்தும். எனினும், தேவைப்பட்டால் கல்வி நிறுவனங்கள் இணையவழிக் வகுப்புகளை நடத்திக்கொள்ளலாம் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதற்கிடையில், திருவனந்தபுரம், கொல்லம், பத்தனம்திட்டா, ஆலப்புழா, கோட்டயம், இடுக்கி, எர்ணாகுளம், கோழிக்கோடு, வயநாடு, கண்ணூர் மற்றும் காசர்கோடு ஆகிய மாவட்டங்களில் கனமழை முதல் மிகக் கனமழை வரை பெய்யக்கூடும் என்று கூறி இந்திய வானிலை ஆய்வு மையம் அங்கு ‘ஆரஞ்சு’ எச்சரிக்கையை விடுத்துள்ளது.

# மின்சார வாரியத்தில் 700 உதவி பொறியாளர்களுக்கு பதவி உயர்வு!




சென்னை, ஜூலை. 31–

தமிழ்நாடு மின்சார வாரியத்தில் (TANGEDCO) பணியாற்றி வரும் 700 உதவி பொறியாளர்களுக்கு பதவி உயர்வு வழங்கப்பட்டுள்ளது. இதற்கான உத்தரவை மின்சார வாரிய நிர்வாகம் வெளியிட்டுள்ளது. பதவி உயர்வு பெற்ற பொறியாளர்கள் பல்வேறு மின் பகிர்மான வட்டங்கள் மற்றும் பிரிவுகளில் பணியமர்த்தப்பட உள்ளனர்.

இதனுடன், பதவி உயர்வின் காரணமாக பணியிட மாற்றம் பெற விரும்பும் உதவி பொறியாளர்களிடம் விருப்ப மனுக்கள் கோரப்பட்டுள்ளன. அவர்கள் தாங்கள் பணியாற்ற விரும்பும் மூன்று இடங்களை முன்னுரிமை அடிப்படையில் தேர்வு செய்து விண்ணப்பிக்க வேண்டும் என்று வாரியம் அறிவுறுத்தியுள்ளது.

பெறப்படும் விண்ணப்பங்கள், காலிப் பணியிடங்கள், நிர்வாகத் தேவைகள் மற்றும் பணிமூப்பு உள்ளிட்ட விதிமுறைகளின் அடிப்படையில் பரிசீலிக்கப்பட்டு, இறுதி பணியிட ஒதுக்கீடு செய்யப்படும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த பதவி உயர்வு நடவடிக்கை, நீண்ட காலமாக பதவி உயர்வுக்காக காத்திருந்த உதவி பொறியாளர்களுக்கு மகிழ்ச்சியை ஏற்படுத்தியுள்ளது. மேலும், மின்சார வாரியத்தின் நிர்வாக செயல்திறனை மேம்படுத்தவும், காலிப் பணியிடங்களை விரைவாக நிரப்பவும் இந்த நடவடிக்கை உதவும் என அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

# பிரதமர் மோடி குறித்து இழிவான ஏஐ சித்தரிப்புகள்.. மெட்டா இந்திய தலைமை அதிகாரி மீது வழக்குப்பதிவு!

புதுடெல்லி, ஜூலை. 31–

தேர்வு முறைகேடுகளுக்கு எதிராக கரப்பான்பூச்சி ஜனதா கட்சி முன்னெடுத்த போராட்டங்களின் போது, பிரதமர் மோடியின் உருவத்தை ஆபாசமாகவும் இழிவாகவும் சித்தரித்து சமூக வலைதளங்களில் பரப்பப்பட்டதாக குற்றச்சாட்டு எழுந்தது.



இதுபற்றி தெலுங்கானா மாநில பாஜக நிர்வாகி சாய்கிரண் புகாரின் அடிப்படையில் ஐதராபாத் சைபர் கிரைம் போலீசார் எப்ஐஆர் பதிந்துள்ளனர். அதில் மெட்டா மெட்டா நிறுவனத்தின் இந்திய தலைமை அதிகாரி இணை குற்றவாளியாக சேர்க்கப்பட்டுள்ளது பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

சாய்கிரண் அளித்த புகாரில், பிரதமர் மோடி, அமெரிக்க அதிபர் மற்றும் முன்னாள் மத்திய அமைச்சர் தர்மேந்திர பிரதான் ஆகியோரை ஏஐ மூலம் இழிவாக சித்தரிக்கும் வகையில் இருந்த 20 பேஸ்புக் மற்றும் இன்ஸ்டாகிராம் பதிவுகளின் (ரீல்ஸ்களின்) இணைப்பை பகிர்ந்துள்ளார்.

பாரதிய நியாய சன்ஹிதா மற்றும் தகவல் தொழில்நுட்பச் சட்டத்தின் கீழ், அந்த சமூக வலைதள கணக்குகளை வைத்திருந்தவர்கள் மீது வழக்குபதியப்பட்டுள்ளது. குறிப்பாக இத்தகைய உள்ளடக்கங்களை அனுமதிக்க உதவியதாக கூறி இன்ஸ்டாகிராம், பேஸ்புக் உடைய தாய் நிறுவனமான மெட்டா நிறுவனத்தின் இந்திய தலைமை அதிகாரி அருண் ஸ்ரீனிவாஸ் இணை குற்றவாளியாக அந்த எப்ஐஆரில் சேர்க்கப்பட்டுள்ளார்.

புகாரில் குறிப்பிடப்பட்ட பதிவுகள் குறித்து மெட்டா நிறுவனத்திற்கு நோட்டீஸ் அனுப்பப்பட்டுள்ளது என்றும் ஏஐ மூலம் உருவாக்கப்பட்ட இந்த போலி வீடியோக்கள் மற்றும் படங்களைப் பதிவேற்றிய நபர்களை அடையாளம் கண்டு கைது செய்ய விசாரணையை தீவிரப்படுத்தியுள்ளதாகவும் சைபர்கிரைம் போலீசார் தெரிவித்துள்ளனர்.

தேர்வு முறைகேடு தொடர்பாகப் பிரதமர் மோடி வெளியிட்ட வீடியோ ஒன்று, தொழில்நுட்பக் கோளாறு காரணமாக பேஸ்புக்கிலிருந்து தவறாக நீக்கப்பட்டதற்கு மெட்டா நிறுவனம் அண்மையில் மன்னிப்பு கோரியது.

இந்த விவகாரங்களைத் தொடர்ந்து, மத்திய மின்னணு மற்றும் தகவல் தொழில்நுட்ப அமைச்சகத்தின் செயலாளர் எஸ். கிருஷ்ணன், மெட்டா நிறுவனத்தின் உயர் அதிகாரிகளை நேரில் ஆஜராகி விளக்கமளிக்குமாறு உத்தரவிட்டுள்ளார்.

# ஒட்டன்சத்திரத்தில் ஆகஸ்ட் 28-ல் நில மீட்பு போராட்டம்!



திண்டுக்கல், ஜூலை. 31–

திண்டுக்கல் மாவட்டம் ஒட்டன்சத்திரத்தில் தலித் விடுதலை இயக்க மாநில செயலாளர் மறைந்த தலித் கே. ராமரின் நினைவேந்தல் மற்றும் திருவுருவப்பட திறப்பு விழா, மாவட்ட செயலாளர் அசுரன் (மகுடீஸ்வரன்) தலைமையில் நடைபெற்றது . நிகழ்ச்சியில் சிறப்பு அழைப்பாளராக கலந்து கொண்ட மாநில தலைவர் ச.கருப்பையா, தலித் கே.ராமரின் திருவுருவப்படத்தை திறந்து வைத்து அவரின் சமூக நீதி, சமத்துவம் மற்றும் தலித் மக்களின் உரிமைகளுக்காக ஆற்றிய பணிகளை நினைவு கூர்ந்து உரையாற்றினார். தொடர்ந்து நடைபெற்ற ஆலோசனைக் கூட்டத்தில், நில உரிமை மற்றும் நில மீட்பு கோரிக்கைகளை வலியுறுத்தி வரும் ஆகஸ்ட் 28–ஆம் தேதி (வெள்ளிக்கிழமை) திண்டுக்கல்லில் மாவட்ட அளவிலான ஆர்ப்பாட்டம் நடத்துவது என ஏகமனதாக தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

இந்த நிகழ்ச்சியில் தலித் கதிர்காமன், மாநில இளைஞரணி செயலாளர் பீமா ராவ், தமிழ் புலிகள் கட்சியின் மாநில வழக்குரைஞர் அணி செயலாளர் சின்னகருப்பன், பிஎஸ்பி மாவட்ட தலைவர் மனோகரன், இந்திய தேசிய காங்கிரஸ் எஸ்சி/எஸ்டி பிரிவு மாவட்ட தலைவர் பிச்சைமுத்து, த.தீ.ஒ.மு. மாவட்ட தலைவர் முத்துசாமி, தேவேந்திர மறுமலர்ச்சி பேரவை பகத்சிங் பழனிசாமி, ஆதித்தமிழர் சமூக நீதிப் பேரவை தலித் கே.சுப்பிரமணியன், தமிழ் தேச மக்கள் முன்னணி காளிமுத்து, விசிக இளஞ்சிறுத்தைகள் பேரவை மாவட்ட செயலாளர் வடிவேல் உள்ளிட்ட பல்வேறு அரசியல் மற்றும் சமூக அமைப்புகளின் பிரதிநிதிகள் பங்கேற்றனர். 100–க்கும் மேற்பட்டோர் கலந்து கொண்ட இந்நிகழ்ச்சியின் இறுதியில், திண்டுக்கல் மாவட்ட தலைவர் ராசேந்திரன் நன்றி தெரிவித்தார்.

# மகாராஷ்டிராவில் இடிந்து விழுந்த 4 மாடி குடியிருப்பு கட்டிடம்.. பலி 8!

மகாராஷ்டிரா, ஜூலை. 31–

தானேவில் உள்ள பிவாண்டி பாலாஜி நகரின் கங்காராம் வாடா பகுதியில் உள்ள கோஹினூர் பில்டிங் என்ற அந்த குடியிருப்பு கட்டடத்தின் ஒரு பகுதி நேற்று இரவு 11:00 மணியளவில் திடீரென இடிந்து விழுந்தது.

ஒவ்வொரு தளத்திற்கும் 12 அறைகள் வீதம் 48 அறைகளை கொண்ட இந்த கட்டிடம் பாதுகாப்பற்றது என பிவாண்டி நகராட்சி ஏற்கனவே எச்சரித்திருந்தது.



இருந்தபோதும் அங்கு மக்கள் வாசித்துள்ளனர். மேலும் கீழ் தளத்தில் பழுது பார்க்கும் பணிகளும் நடந்து வந்துள்ளன.

நேற்று இரவு 9 மணி அளவிலேயே கட்டிடத்தில் பலத்த சத்தங்கள் கேட்டுள்ளன. இதனால் அக்கம்பக்கத்தில் இருந்தவர்கள் உதவியுடன் கட்டிடத்தில் இருந்த குடும்பங்கள் வெளியேறின. இருப்பினும் பழுது பார்க்கும் தொழிலாளர்கள் உட்பட சிலர் உள்ளேயே சிக்கியுள்ளனர்.

இரவு 11 – 11.30 மணியளவில் கட்டிடத்தின் பி–விங் பகுதி முழுவதுமாக இடிந்து விழுந்துள்ளது. தகவலறிந்து விரைந்த தேசிய பேரிடர் மீட்புப் படையினர் உள்ளே சிக்கியிருந்தவர்களை மீட்க இரவு முழுவதும் போராடினர்.

ஆனால் துரதிஷ்டவசமாக இதுவரை 8 பேர் சடலங்களாக மட்டுமே மீட்கப்பட்டுள்ளனர்.




இஸ்மாயில் லக்கி டிராவல்ஸ்
127, T.P.K.ரோடு,
மதுரை.
Ph: 98659 88882
மதுரை to சென்னை
ரெகுலர் சர்வீஸ்
பஸ் மற்றும் பார்சல்
சர்வீஸ் உள்ளது
சென்னை
Ph: 98659 88881



## இன்றைய கார்ட்டூன்




## புதிதாக 93 ஊராட்சிகள், 9 ஊ. ஒன்றியங்கள்!

சென்னை, ஜூலை. 31–
புதிதாக பொறுப்பேற்றுள்ள அரசு, புதிதாக ஒன்பது ஊராட்சி ஒன்றியங்கள், 93 ஊராட்சிகளை உருவாக்கி உள்ளது. ஊரக வளர்ச்சி




மற்றும் பஞ்சாயத்து ராஜ் துறையின் செயலர் பிரசாந்த் வடநேரே, இதற்கான அரசாணையை வெளியிட்டு உள்ளார்.

அதன்படி, நீலகிரி மாவட்டத்தில், குந்தா, பண்டலூார்; திருவள்ளூரில் மாதர்பாக்கம்; காஞ்சிபுரத்தில் சாலவாக்கம்; விழுப்புரத்தில் கிளியனுார், கஞ்சனுார்; திருவண்ணாமலையில் மழையூர்; கிருஷ்ணகிரியில் அஞ்செட்டி; கள்ளக்குறிச்சியில் வானபுரம் ஆகிய, ஒன்பது ஊராட்சி ஒன்றியங்கள் புதிதாக உருவாக்கப்பட்டுள்ளன.

இப்புதிய ஊராட்சி ஒன்றியங்களுக்கு, மக்கள் பிரதிநிதிகள் இல்லாததால், நிர்வாக பணிகளை மேற்கொள்ள துணை இயக்குநர் அந்தஸ்தில், சிறப்பு அதிகாரிகள் நியமிக்கப்பட்டு உள்ளனர்.

அதேபோல், நீலகிரி மாவட்டத்தில் 61; ஈரோட்டில் 9; கோவையில் 7; கள்ளக்குறிச்சி, திருச்சியில் தலா 4; திண்டுக்கல், வேலுாரில் தலா 2; தென்காசி, தர்மபுரி, சிவகங்கை, கரூர் ஆகிய மாவட்டங்களில், தலா ஒரு ஊராட்சி என, புதிதாக 93 ஊராட்சிகள் உருவாக்கப்பட்டுள்ளன.

## ராகுல் காந்தி தமிழகம் வருகை; முதல்-அமைச்சர் விஜயுடன் சந்திப்பு?

மதுரை, ஜூலை. 31––
லோக்சபா எதிர்க்கட்சி தலைவர் ராகுல், நாளை தமிழகம் வருகிறார். தமிழக காங்கிரஸ், தலைவராக மாணிக்கம் தாகூர் பதவியேற்றதும், ஒரு கோடி ரூபாய் செலவில், 'இயக்க மறுசீரமைப்பு திட்டம்' என்ற பெயரில், மாமல்லபுரத்தில், காங்கிரஸ் மாவட்ட தலைவர்களுக்கு பயிற்சி முகாமுக்கு ஏற்பாடு செய்தார்.



கடந்த 23ம் தேதி முதல் ஆகஸ்டு, 1 வரை நடைபெறும் இந்த பயிற்சி முகாமில், நாளை ராகுல் பங்கேற்கிறார். இதற்காக, நாளை தமிழகம் வரும் அவர், பயிற்சி முகாமில் மூன்று மணி நேரம் செலவிடும் வகையில், பயண திட்டம் வடிவமைக்கப்பட்டு உள்ளது. காங்கிரஸ் மாவட்ட தலைவர்களின் குடும்பத்தினருடன் ராகுல் காந்தி கலந்துரையாடுகிறார்.

காங்கிரஸ் மாவட்ட தலைவர் ஒருவர் கூறுகையில், முகாமில் விவசாயிகள், நுாறு நாள் திட்டப் பணியாளர்கள் உள்ளிட்டோருடன் சந்திப்பு போன்ற களப்பயிற்சி அளிக்கப் பட்டது.

"எங்களுடன் நேரடி தொடர்பை ஏற்படுத்தும் வகையில் ராகுல் எங்களை சந்திக்கிறார். முதல்–அமைச்சர் விஜயையும் ராகுல் காந்தி சந்திப்பார்," என தெரிவித்தார்.

## அ.தி.மு.க.வில் தொடரும் உட்கட்சி பூசல்!

சென்னை, ஜூலை. 31–
அ.தி.மு.க. பொதுச்செயலாளர் எடப்பாடி பழனிசாமி தலைமையில் மாவட்ட வாரியாக நிர்வாகிகள் ஆலோசனைக் கூட்டம் நடந்து வருகிறது. அதில் கோவை மாவட்ட நிர்வாகிகள் கூட்டத்தில் முன்னாள் அமைச்சர் எஸ்.பி.வேலுமணியும், நாமக்கல் மாவட்ட நிர்வாகிகள் கூட்டத்தில் முன்னாள் அமைச்சர் தங்கமணியும் பங்கேற்கவில்லை.



அதாவது இருவரும் எடப்பாடி பழனிசாமி மீதுள்ள அதிருப்தி காரணமாக பங்கேற்கவில்லை என்று அ.தி.மு.க.வினர் கூறுகின்றனர். இந்த சூழ்நிலையில் இருவருக்கும் எடப்பாடி பழனிசாமி அழைப்பு விடுத்துள்ளார். சுதந்திர போராட்ட வீரர் தீரன் சின்னமலையின் 221–வது நினைவு நாள் வருகிற 3–ந்தேதி அனுசரிக்கப்படுகிறது.

இதையொட்டி, அ.தி.மு.க. சார்பில் பொதுச்செயலாளர் எடப்பாடி பழனிசாமி உள்ளிட்ட தலைவர்கள் மரியாதை செலுத்துகின்றனர். சென்னை கிண்டியில் தீரன் சின்னமலை சிலைக்கு எடப்பாடி பழனிசாமி மரியாதை செலுத்துகிறார். அதேபோல், ஈரோடு மாவட்டம் அறச்சலூரில் உள்ள தீரன் சின்னமலை மணிமண்டபத்தில் அமைந்துள்ள திருவுருவச்சிலைக்கு முன்னாள் அமைச்சர் எஸ்.பி.வேலுமணியும், சேலம் மாவட்டம் சங்ககிரி – ஈரோடு பிரிவு சாலையில் அமைந்துள்ள தீரன் சின்னமலை நினைவுச்சின்னத்தில் முன்னாள் அமைச்சர் தங்கமணியும் மரியாதை செலுத்துவார்கள் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. இதுதொடர்பான அறிவிப்பை எடப்பாடி பழனிசாமி நேற்று வெளியிட்டுள்ளார்.

இந்த அழைப்பை ஏற்று வேலுமணி, தங்கமணி ஆகியோர் இந்த நிகழ்ச்சியில் கலந்து கொள்வார்களா? அல்லது புறக்கணிப்பார்களா என்ற கேள்வி எழுந்துள்ளது.

## அரசு பஸ்களில் பார்சல் வசதி.. நஷ்டத்தை போக்க புதிய முடிவு..!!

சென்னை, ஜூலை. 31–
தமிழ்நாடு அரசு போக்குவரத்து கழகங்களில் பார்சல் அனுப்பும் வசதி விரைவில் ஏற்படுத்தப்பட உள்ளது.

அரசு போக்குவரத்து



கழகங்களின் வருவாயை பெருக்க, தமிழ்நாடு அரசு புதிய திட்டங்களை செயல்படுத்த முடிவு செய்துள்ளது. அதற்காக, பார்சல்கள் ஏற்றிச் செல்லும் வசதியுடன் புதிய பஸ்கள் தயாரிக்கப்படுகின்றன. அதுபோன்ற பஸ்சை போக்குவரத்துதுறை அமைச்சர் பார்த்திபன் ஆய்வு செய்தார்.

இது குறித்து, அரசு போக்குவரத்துகழக அதிகாரிகள் கூறுகையில், "கட்டண உயர்வு இன்றி இதர வழிகளில் வருவாயை பெருக்க புதிய திட்டங்களை செயல்படுத்த உள்ளோம். அரசு போக்குவரத்து கழகங்களில் உள்ள காலி இடங்களை தனியாருக்கு நீண்ட நாட்களுக்கு குத்தகைக்கு விடுவது, சூரியசக்தி மின் உற்பத்தி திட்டங்களை செயல்படுத்துவது, பஸ் நிலையங்களில் வணிக வளாகம் அமைப்பது உள்ளிட்ட பல்வேறு நடவடிக்கைகள் எடுக்கப்பட உள்ளன. உடனடியாக செயல்படுத்தும் வகையில் வெளியூர் செல்லும் அரசு விரைவு பஸ்களில் பார்சல் எடுத்துச் செல்வதற்கான நடவடிக்கைகளை தொடங்க முடிவு செய்துள்ளோம். பயணிகள் தங்களது பயணத்தின்போது, கையில் எடுத்து செல்ல முடியாத பெரிய பொருட்கள், லக்கேஜ்களை, 'பார்சல்' என புக்கிங் செய்து அதற்கான கட்டணம் செலுத்தி எடுத்து செல்லலாம்.

இதற்காக, புதிய பஸ் பின்பகுதியில், பிரத்யேக இடம் ஒதுக்கீடு செய்யப்படும். நியாயமான முறையில் கட்டணம் இருக்கும். முதல் கட்டமாக, சென்னை உட்பட முக்கிய நகரங்களை இணைக்கும் வகையில் ஆயிரம் அரசு விரைவு பஸ்களில் இந்த திட்டத்தை செயல்படுத்த திட்டமிட்டு உள்ளோம்" என்று அவர்கள் கூறினர்.


## நாடாளுமன்ற வளாகத்தில் ராகுல் காந்தி உள்ளிட்ட எம்.பிக்கள் நூதன போராட்டம்!



புதுடெல்லி, ஜூலை. 31–
நாடாளுமன்ற மழைக்கால கூட்டத்தொடர் தொடங்கிய முதல் நாளில் இருந்தே அனல் பறந்து வருகிறது. நீட் வினாத்தாள் கசிவு விவகாரம், நீட் முறை கேடுகளுக்கு பொறுப்பேற்று தர்மேந்திர பிரதான் ராஜினமா செய்ய வலியுறுத்தி கரப்பான் பூச்சி ஜனதா கட்சியினர் நடத்திய போரட்டத்தில் பாதுகப்பு படையினர் தாக்குதல் நடத்திய விவகாரம் உள்ளிட்ட பிரச்சினைகளை எழுப்பி இரு அவைகளிலும் எதிர்க்கட்சிகள் கடும் அமளி யில் ஈடுபட்டு வருகின்றன. மக்களவை கூடியதும் அமளி தொடர்ந்ததால், நண்பகல் 12 மணி வரை அவை ஒத்திவைக்கப்பட்டது. மாநிலங்களவை நாள் முழுவதும் ஒத்திவைக்க ப்பட்டுள்ளது. முன்னதாக நாடாளுமன்ற வளாகத்தில் இந்தியா கூட்டணி எம்பிக்கள் நூதன போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர். அயோத்தி ராமர் கோவில் நன்கொடை முறைகேடு பிரச்சினையை கவனத்திற்கு கொண்டு வரும் விதமாக, ராகுல் காந்தி உள்ளிட்ட எம்பிக்கள் உண்டியல்களில் பணம் போட்டு தங்கள் கண்டனத்தை பதிவு செய்தனர். ராமர் கோவில் நன்கொடை முறைகேடு தொடர்பாக கையில் பேனர்களையும் கையில் வைத்து இருந்தனர்.

## 'பிட்சாட்' செயலிக்கு மத்திய அரசு தடை... பாதுகாப்பு அச்சமே காரணம்!

புதுடெல்லி, ஜூலை. 31–
இணைய இணைப்பு இல்லாமலேயே புளூடூத் (Blue tooth) தொழில்நுட்பத்தின் மூலம் தகவல் பரிமாறும் 'பிட்சாட்' (Bitchat) செயலிக்கு




மத்திய அரசு தடை விதித்துள்ளது. இந்த செயலி வழக்கமான மொபைல் நெட்வொர்க், இணைய இணைப்பு அல்லது மையச் சர்வரை சார்ந்து இயங்காததால், பயனர்களின் தகவல் பரிமாற்றத்தை சட்ட அமலாக்க அமைப்புகள் கண்காணிப்பது சிரமமாக இருப்பதாக அரசு தெரிவித்துள்ளது.

அரசின் விளக்கப்படி, மொபைல் எண் பதிவு, பயனர் அடையாள சரிபார்ப்பு, தகவல் தொடர்பு பதிவுகள் போன்றவை இல்லாமல் அனாமதேயமாக தகவல் பரிமாற இந்த செயலி உதவுகிறது. இதனால் கலவரம், சட்டவிரோத செயல்கள், பயங்கரவாத நடவடிக்கைகள் மற்றும் குற்றச் செயல்களை ஒருங்கிணைக்க இது தவறாக பயன்படுத்தப்படும் அபாயம் இருப்பதாக உளவுத்துறை எச்சரித்துள்ளது. குறிப்பாக, இணைய சேவைகள் நிறுத்தப்பட்ட சூழலிலும் இந்த செயலி தொடர்ந்து செயல்படக்கூடிய தன்மை கொண்டதால், பாதுகாப்பு அமைப்புகளுக்கு கூடுதல் சவாலாக இருப்பதாக கூறப்படுகிறது.

இந்த தடை குறித்து செயலியின் உருவாக்குநரான ஜாக் டோர்ஸி கருத்து தெரிவித்த நிலையில், மத்திய அரசு தேசிய பாதுகாப்பு மற்றும் பொதுமக்கள் பாதுகாப்பை கருத்தில் கொண்டே இந்த முடிவு எடுக்கப்பட்டதாக விளக்கம் அளித்துள்ளது. இதுபோன்ற இணைய இணைப்பு இன்றி இயங்கும் மற்ற செயலிகளையும் ஆய்வு செய்து தேவையான நடவடிக்கை எடுக்க வேண்டும் என்ற கோரிக்கையும் பல தரப்பில் எழுந்துள்ளது.

## ஆகஸ்ட் மாதத்தில் 14 நாள் வங்கி விடுமுறை; தமிழ்நாட்டில் 6 நாட்கள்!




சென்னை, ஜூலை. 31–
ஆகஸ்ட் 2026–ல் நாடு முழுவதும் மாநில வாரியாக மொத்தம் 14 நாட்கள் வங்கிகளுக்கு விடுமுறை அறிவிக்கப்பட்டுள்ளது. தமிழ்நாட்டில் ஞாயிறு (2, 9, 16, 23, 30), சுதந்திர தினம் (15) மற்றும் மிலாடி நபி (26) உள்ளிட்ட 6 நாட்கள் வங்கிகள் செயல்படாது. இருப்பினும், நெட் பேங்கிங் மற்றும் ஆன்லைன் சேவைகள் வழக்கம்போல் கிடைக்கும்.




## சினிமா துளிகள்..!

### ஜாய் கிரிசில்டா மகனை தன் குழந்தை என ஏற்றுக்கொண்ட மாதம்பட்டி ரங்கராஜ்!



பிரபல சமையல் கலைஞரும் தொழிலதிபருமான மாதம்பட்டி ரங்கராஜ், ஆடை வடிவமைப்பாளர் ஜாய் கிரிசில்டாவுக்கு பிறந்த குழந்தை தனது மகன்தான் என்று சமூக வலைதள பதிவின் மூலம் மறைமுகமாக உறுதி செய்துள்ளார். கடந்த 6 மாதங்களாக மகனின் தந்தையாக அனைத்து பொறுப்புகளையும் ஏற்று வருவதாகவும், அவரது எதிர்காலத்திற்கு முழுப் பொறுப்புடன் இருப்பேன் என்றும் தெரிவித்துள்ளார். இதன் மூலம் நீண்ட நாட்களாக நீடித்த சர்ச்சைக்கு முற்றுப்புள்ளி வைக்கப்பட்டுள்ளது.

### பிக்பாஸ் 10–ல் பரீனா?




பிக்பாஸ் 10வது சீசன் செப்டம்பரில் தொடங்க உள்ள நிலையில், 'பாரதி கண்ணம்மா' சீரியல் மூலம் பிரபலமான நடிகை பரீனா போட்டியாளராக பங்கேற்கலாம் என்ற தகவல் சமூக வலைதளங்களில் வைரலாகி வருகிறது. ஆனால், இதுகுறித்து இதுவரை அதிகாரப்பூர்வ அறிவிப்பு வெளியாகவில்லை.

### இரட்டிப்பு மகிழ்ச்சியில் நடிகர் கவின்!



நடிகர் கவின் தனது இன்ஸ்டாகிராம் பதிவின் மூலம், தனக்கும் மனைவி மோனிகாவிற்கும் ஒரு ஆண் மற்றும் ஒரு பெண் என இரட்டை குழந்தைகள் பிறந்துள்ளதாக அறிவித்துள்ளார். இதையடுத்து ரசிகர்களும், திரைப்பிரபலங்களும் வாழ்த்துகளை குவித்து வருகின்றனர்.

## தமிழகத்துக்கு 15 நாட்களுக்கு 3,500 கனஅடி நீர் திறக்க உத்தரவு

புதுடெல்லி, ஜூலை. 31–
காவிரி மேலாண்மை ஆணையக் கூட்டத்தில், கர்நாடகாவின் எதிர்ப்பை நிராகரித்து, அடுத்த 15 நாட்களுக்கு தமிழகத்துக்கு வினாடிக்கு 3,500 கனஅடி நீரை திறந்துவிட உத்தரவிடப்பட்டது. கர்நாடக அணைகளில் போதிய நீர் இருப்பும், வரும் மாதங்களில் மழை வாய்ப்பும் இருப்பதால் வறட்சி கால நீர் பங்கீட்டின்படி இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டது.

## திருச்செந்தூர் கோவிலில் தரிசன நேர கட்டுப்பாடு!



திருச்செந்தூர், ஜூலை. 31–
திருச்செந்தூர் முருகன் கோவிலில் ரூ.100 கட்டண தரிசனம் மாலை 6.30 மணி வரை, பொது தரிசனம் மாலை 7 மணி வரை மட்டுமே அனுமதிக்கப்படும் என கோவில் நிர்வாகம் அறிவித்துள்ளது. புதிய நேரக் கட்டுப்பாட்டால் பக்தர்கள் அதிர்ச்சி அடைந்துள்ளனர்.

Printed by Dr.P.Pandiarajan, Printed at Raja Printers at No.5, Namashivayam Nagar 2nd St, Duraisamy Nagar, Madurai -625 016. Published by Dr.P.Pandiarajan, at No.5, Namashivayam Nagar 2nd St, Duraisamy Nagar, Madurai -625 016. Editor: Dr.P.Pandiarajan. TN/WPP-143/SR/2018-2020